Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 59/2024

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர். | - | தரனேஸ்வரி | வட்டம் | - | திண்டிவனம் |
| த/பெ. | - | சிவப்பிரகாசம் | வயது | - | 46 |
| கிராமம் | - | ரோஷனை காவல் நிலையம் | | | |

30.01.2026

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**.

1. நான் தற்போது ரோஷனை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 03.05.2016 ந் தேதி காலை 10.30 மணியளவில் முதல் நிலைய காவலர் ஜெயபிரகாஷ் அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த போது சித்தாத்தூர் கிராமத்தை சேர்ந்த சுந்தரம் மனைவி அலமேலு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து நிலைய சி.எஸ்.ஆர்.100/2016 என பதிவு செய்து , எனது பார்வைக்கு வைத்ததை நான் 09.05.2016 ந் தேதி 12.00 மணியளவில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிலைய குற்ற எண்.227/2016 ச/பி. 294(பி), 324, 506(2) இதச r/w4 of TNWH Act-படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆகும்.**

2. மேற்படி வழக்கை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 13.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஏழுமலை மற்றும் கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆகும்**.

3. பின்பு சாட்சிகள் அலமேலு, சுந்தரம், முருகன், ஞானவேல், ஏழுமலை, கண்ணன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் எதிரி லீலா என்பவரை அன்றே 16.00

மணியளவில் சித்தாத்தூர் பஸ் நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து காவலுக்கு உட்படுத்தினேன். இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற எதிரி சேகர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் மூலம் முன்பிணையில் சென்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை.

4. சம்பவத்தில் காயமடைந்த அலமேலு என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சுஜிதா என்பவரை 28.05.2016 ந் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அறிக்கை பெற்றேன். அதில் மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்து தெரிவித்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை ச/பி. 294(பி), 324, 506(2) இதச r/w4 of TNWH Act- என்பதை ச/பி. 294(பி), 323, 324, 352, 506(2) இதச r/w4 of TNWH Act- ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்**. இத்துடன் எனது வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 294(பி), 323, 324, 352, 506(2) இதச r/w4 of TNWH Act- படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

1. சம்பவம் நடைப்பெற்றதாக சொல்லக்கூடிய தேதி என்னவென்றால் 02.05.2016 மாலை சுமார் 06.30. புகார் வாக்குமூலம் பெறப்பட்ட நாள் 03.05.2016 ந் தேதி, சி.எஸ்.ஆர்.100/2016 பதிவு செய்யப்பட்டது. 03.05.2016 ல் இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேனா என்றால் தலைமை காவலர் புகாரை பெற்று சி.எஸ்.ஆர் பதிவு செய்துள்ளார், பின்னர் காவல் நிலையத்தில் பொறுப்பில் யாரும் அதிகாரிகள் இல்லாததால் 09.05.2016 ல் எனது பார்வைக்கு வைத்தார். அதனை நான் பார்வையிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2. விசாரணையை என்றைக்கு துவங்கினேன் என்றால் 09.05.2016. புகார்தாரர் அலமேலுவை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் குறிப்பிடவில்லை, நியாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு யாராவது விசாரணை செய்து பதிவு செய்தேனா என்றால் இல்லை, புகாரில் முகாந்திரம் இருந்ததால் பதிவு செய்தேன்.

3. சம்பவ இடத்திற்கு என்றைக்கு சென்றேன் என்றால் 09.05.2016 ந் தேதி சென்றேன். சம்பவத்திற்காக பயன்படுத்ததாக சொல்லப்படும் பொருட்களை எதாவது கைப்பற்றினேனா என்றால் இல்லை. ரத்த மாதிரிகள் எதாவது சேகரித்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடைப்பெற்றதாக சொல்லப்படும் இடம் 1 இடமா, 2 இடமா என்றால் 2 இடம். இந்த 2 இடத்தையும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, 1 இடத்தை குறிப்பிட்டுள்ளேன். இறுதி அறிக்கையிலும் முதல் சம்பவத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

4.புகார்தாரர் வீடும், எதிரி வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். சாட்சிகளை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தேன். சம்பவ இடத்திற்கு மடிக்கணினி எடுத்துச்சென்றேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் கணினியில் தட்டச்சு செய்தது நானே செய்தேனா என்றால் சிசிடி என்.எஸ் காவலர் என்னுடன் வந்தார், அவர் தட்டச்சு செய்தார். தட்டச்சு செய்து சம்பவ சாட்சிகளிடம் அங்கு தான்

கையெழுத்து வாங்கினேனா என்றால் ஆமாம். பிரிண்டரும் உடன் எடுத்துச்சென்றேனா என்றால் ஆமாம்.

5. பிரிவு மாற்றல் அறிக்கையில் புகார்தாரர் எங்கிருந்து எங்கு சென்றார் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் வாதி தனது வீட்டிற்கு செல்லும் போது என்று சொல்லியுள்ளேன். எங்கிருந்து வீட்டிற்கு போனார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். கருங்கல்லால் தாக்கப்பட்டதாக சொல்லும் சம்பவம் எங்கு நடந்தது என்றால் முதல் சம்பவம் நிலத்தில் நடந்துள்ளது. அதை மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. தலைமை காவலர் ஜெயபிரகாஷ் என்பவரை என்றைக்கு விசாரணை செய்தேன் என்றால் 28.05.2016 ல் விசாரணை செய்தேன். மருத்துவரை என்றைக்கு விசாரணை செய்தேன் என்றால் 28.05.2016 ல். சம்பவ தேதிக்கும் , தலைமை காவலர், மருத்துவரை விசாரித்த தேதிக்கும் இடையில் 25 நாட்கள் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கை என்றைக்கு பதிவு செய்தேன் என்றால் தேதி 08.09.2016 ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. புகார்தாரருடைய மனைவி வீட்டுவாசலில் தாக்கப்பட்டதாக சொல்கிறார், புகார்தாரர் நிலத்தில் தாக்கப்பட்டதாக சொல்கிறார், எனது விசாரணையில் எங்கு நடைப்பெற்றதாக தெரிந்துகொண்டேன் என்றால் சம்பவம் இரண்டு இடத்திலும் நடந்தது. தாக்கப்பட்டது எங்கு என்றால் நிலத்தில். நிலத்தில் தாக்கப்பட்டதாக சொல்லும் நேரமும், வீட்டில் தாக்கப்பட்தாக சொல்லும் நேரம் 06.30 என்று சொல்லப்பட்டுள்ளது, எவ்வாறு ஒரே நேரத்தில் தாக்கப்பட்டார் என்றால் கைதவறுதலாக 06.30 என்று குறிப்பிட்டுள்ளது. இவ்வழக்கில் புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.